Registration Number of the Newspaper RNI. No. TN TAM / 1999 / 577
Date of Posting 5th or 7th of Every Month at Head Post Office, Madurai - 625 001
POSTAL REGISTRATION No. TN/MA37/2012-2014

## 2012 செப்டம்பர் மாத வாக்கு

**"இலவசமாய்ப் பெற்றீர்கள்**
**இலவசமாய்க் கொடுங்கள்"** மத்தேயு 10:8

**"Freely ye have received, freely give"** **(Matt. 10:8)**

**Food For Thought:**
If you need, take.
If you have, give

**Prayer:** In the joyful spirit of giving and receiving, dear Lord, help me to share my blessings with those in need. - Fay Angus

Return Requested

Pastor. J. Israel Vidya Prakash
"Jeeva Thanneer - Kamala Cottage"
2/888, M.M.S. Colony, Reserve Line (P.O), Naganakulam, Iyer Bangalow,
Madurai - 625 014. Tamilnadu, India.

**Contact No: 94432 79046 & 0452 2680 675**
livingwatermadurai@yahoo.co.in | israel.vidyaprakash@gmail.com

Owned and published by J. Israel Vidya Prakash from 2/888, M.M.S. Colony, Naganakulam, Reserve line P.O., Madurai - 625 014
Printed by Nissi Graphics for V.G. Printers, 36, Kakkan Street, Shenoy Nagar, Madurai-625 020. Editor: J. Israel Vidya Prakash
Designed by Nissi Graphics, Mdu - 16. Cell: 96262 70424

# ஜீவதண்ணீர்

# JEEVA THANNEER

தனிப்பிரதி ₹.10/- வருட சந்தா ₹.100/- ஆயுள் சந்தா ₹.1000/-

செப்டம்பர் 2012







பாஸ்டர். J. இஸ்ரேல் வித்ய பிரகாஷ்
Managing Trustee / Editor & Publisher

சகோ. D.J.J. பெத்தேல்ராஜ்
Associate Editor

# Living Water Ministries Trust

Regd. No. 1806/B4-2008

2/888, M.M.S. Colony Main Road/ Reserve Line (P.O) Iyer Bangalow, Madurai - 625 014



Founders:
Pastor. J. Israel Vidya Prakash B.Com.,
Mrs. I. Dorothy Israel M.Sc., M.Phil.,

Phone: 0452 2680 675
Mobile: 94432 79046
israel.vidyaprakash@gmail.com




**ஜீவதண்ணீர்**
**இனியொரு விசுவாச வீதி அமைப்போம்**

ஆசிரியர்
**J.இஸ்ரேல் வித்ய பிரகாஷ்**

உதவி ஆசிரியர்
**D.J.J. பெத்தேல்ராஜ்**

எழுத்தாளர்கள்
பாஸ்டர் **S. விக்டர் ஜெயபால்,** தூத்துக்குடி
பாஸ்டர் **A. தாமஸ்ராஜ்,** சென்னை
பாஸ்டர் **J. இஸ்ரேல் வித்ய பிரகாஷ்,** மதுரை
சகோ. **D.J.J. பெத்தேல்ராஜ்,** மதுரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். எட்டு மாதங்களைக் கடந்து இந்தச் செப்டம்பர் மாதத்திற்குள் பிரவேசிக்கக் கிருபை கொடுத்த தேவனைத் துதிக்கிறேன்.

**"எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல் தயவையும் எனக்குப் பாராட்டினீர்; உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது"** (யோபு 10:12)என்று பக்தன் யோபு எழுதிவைத்துள்ளார். இது பாடுகளின் குகைக்குள் சென்றவனின் கூற்று. **உயரத்தில்** இருப்பவர்கள் கூட இப்படிச் சொல்லித் தேவனைத் துதிக்க இயலாது. ஆனால், **துயரத்தில்** உள்ளவன் கர்த்தரை உயரத்தில் வைத்துப் பார்க்கிறான். என்றைக்குமே எளியவர்கள்தான் இஸ்ரவேலின் பரிசுத்தரைப் பாடி மகிழ்பவர்கள். அருமையான தேவ ஜனமே கர்த்தர் நமக்கு ஜீவனைத் தந்து அப்படியே அனாதையாய் விட்டுவிடவில்லை. ஜீவனோடுகூட தயவையும் பாராட்டியுள்ளார். ரூத் போவாசிடம் தனது முதல் சந்திப்பில் கேட்டது அதுதான். உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும் என்றாள் (ரூத் 2:13). ரூத்திற்குக் கிடைத்த தயை பெரியது. அவள் தரித்திரத்தின் சரித்திரத்தைக் கடந்து சரித்திரம் படைத்தாள். ஆண்டவரே உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும் என்பதே தினமும் அதிகாலையில் ஏறெடுக்க வேண்டிய ஜெபமாகும். தேவனுடைய கிருபை, தயவு, காருண்யம் இவைகளை அடிக்கடி நம்முடைய நாவால் அறிக்கை செய்துகொண்டே இருப்பது நல்லது. அப்போது நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நம்முடைய அனைத்து ஊழியங்களையும் தேவன் தயவாய் ஆசீர்வதித்தார். கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள் (சங்.126:2) என்ற வேத வசனத்தின்படி ஆகஸ்ட் 15-ம் தேதி நமது இன்னிசையில் நற்செய்திக் கூட்டம் நடைபெற்ற அன்றைய தினம் மாத்திரம் மழை பெய்யாதபடி தயை செய்தார். அதற்கு முந்தின நாட்களிலும், கூட்டம் நடைபெற்ற அடுத்த நாளிலும் கன மழை பெய்தது. **எங்களது பிரயாசங்கள் ஒன்றாகிலும் மழைத் தண்ணீரில் கரைந்துபோகாதபடி ஜீவதண்ணீரில் நனைந்து ஜனங்களின் இதயங்களில் விதையாக விழும்படி தேவன் கிருபை செய்தார்.** அந்த அற்புத நாளை அய்யர்பங்களா மறந்துபோகவில்லை. கர்த்தர் நல்லவர். ஜெபங்களுக்குப் பதில் தந்தார். ஜெபித்த, கொடுத்த, ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி.

நேர்த்தியாகப் பாடல்களைப் பாடி தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்திய **பாஸ்டர் ஜான்சன் & ஷீபா ஜான்சன்** மற்றும் அவர்களது குழுவினர் அனைவருக்காக தேவனைத் துதிக்கிறேன்.

இம்மாதமும் தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்ற அதற்கு வேண்டிய கிருபைகளை தேவன் பெருகச்செய்ய ஜெபித்துக்கொள்ளுங்கள். கிருபை உங்களோடிருப்பதாக.

அன்புடன் உங்கள் சகோதரன்
**J. இஸ்ரேல் வித்ய பிரகாஷ்**



*ஊழியர் பகுதி*

# சிரசுக்கு வந்த சிங்காரம் 3

**தொடர்...**


Pastor. **A. Thomasraj**
President - Apostolic Christian Assembly




நம்முடைய சிரசைச் சிங்காரிக்கும் தேவன் நம்மை நடத்திச் செல்லும் பாதைகள் சில வேளைகளில் கடினமானவைகளாயிருக்கும். யாக்கோபே உன்னைச் சிருஷ்டித்தவரும் இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது என்று ஏசாயா 43:1-ல் வாசிக்கிறோமே, அதுபோல என்னுடைய வாழ்க்கையில் என்னை வழிநடத்திவந்த பாதைகளைத் திரும்பிப் பார்த்தால், என்னைச் சிருஷ்டித்த கர்த்தருடைய கரமானது என்னை உருவாக்கிய விதத்தைக் காணமுடியும். கர்த்தர் நம்மைச் சிருஷ்டித்து அப்படியே விட்டுவிடுகிறவரல்ல. தாம் விரும்புகிற பாத்திரமாய், தாம் எதிர்பார்க்கிற கிறிஸ்துவின் சாயல் நம்மில் உருவாகும்படி நம்மை உருவாக்குகிறவராய் அவர் இருக்கிறார். இதை வாசிக்கிற உங்களில் அநேகர் எனது ஜீவிய சாட்சியை அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன். தொடர்ந்து வாசியுங்கள். நான் கடந்து வந்த பாதைகளில் கர்த்தர் என்னை நடத்திய வழிகளும் அவர் என்னை உருவாக்கிய விதமும் உங்களில் விசுவாசத்தைத் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை.

## அப்பத்தின் வீட்டில் ஓர் ஆரம்பம்

நாங்கள் சிறு வயதில் வறுமை என்றால் என்னவென்றே தெரியாத சூழ்நிலையில் வாழ்ந்து வந்தோம். எங்கள் வீட்டில் அநேக வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் இருந்தார்கள். நாங்கள் செல்வச் செழிப்பாய் வாழ்ந்துகொண்டிருந்தோம். திடீரென்று எங்கள் குடும்பமானது ஒரு மாபெரும் வீழ்ச்சியைக் கண்டது. எங்கள் அப்பாவின் குடிப் பழக்கத்தால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்தோம். அப்போதுதான் வறுமையின் கொடுமையைக் கண்டோம்.

வறுமையின் காரணமாக நான் இப்போது ஊழியம் செய்கிற இதே ஆவடியில் ஒரு கூலி வேலை செய்தாவது பிழைத்துக்கொள்ளலாம் என்று எனது 14வது வயதில் ஆவடிக்கு வந்து சேர்ந்தோம். இதே ஊரில் ஒரு வேளை ஆகாரத்திற்கு வழியில்லாமல் அலைந்த அனுபவங்கள் எனக்கு உண்டு. இந்த ஆவடியில் நான் மூட்டை சுமந்து கூலி வேலை செய்திருக்கிறேன். எனது 21-வது வயதிலே இந்த ஆவடியில் பல இடங்களில் பல மளிகைக் கடைகளில் வேலை செய்து பல்வேறு கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். கடைசியாக மும்பைப் பட்டணத்திற்குச் சென்றேன். ஆனால், பிழைக்க வழியின்றி எல்லாவற்றையும் இழந்து திரும்பவும் சென்னைக்கு வந்தேன். ஏன் சென்னைக்கு வந்தேன் என்றால், ரயில் தண்டவாளத்தில் விழுந்து சாவதற்காகத்தான் வந்தேன். சென்னையில் என் அம்மா இருந்ததால் சாவதற்கு முன் கடைசியாக ஒரு முறை அவர்களைப் பார்த்துவிட்டு அன்றைக்கு இரவு 7.15 மணிக்கு அந்த வழியாக வரும் கொச்சின் மெயிலில் விழுந்து சாவதற்காகப் பெரம்பூர் ரயில் நிலையத்தில் இடத்தையெல்லாம் குறித்து வைத்திருந்தேன். இனிமேல் வாழவே முடியாது, வாழவும் கூடாது என்ற சூழ்நிலையில்தான் நான் கடைசியாக என் அம்மாவைப் பார்க்க வீட்டுக்குப் போனேன். என்னைப் பொருத்தமட்டில் அந்த நாள்தான் என்னுடைய வாழ்க்கையின் கடைசி நாள் என்று நினைத்திருந்தேன். ஆனால், அந்த நாள்தான் தேவன் என் வாழ்க்கையில் புதுமை செய்யும் நாளாய் இருந்தது என்பதைப் பின்னர் புரிந்து கொண்டேன். புதுமை செய்யும் தேவன் என் வாழ்வில் கிரியை செய்ய ஆரம்பித்த நாளை என்னால் மறக்கவே முடியாது. அன்றைக்கு ஒரு ஊழியக்காரர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் ஒரு இரண்டு மணி நேரம் தாமதித்து வந்திருந்தால் தாமஸ்ராஜ் என்று ஒருவன் இருந்திருக்கவே மாட்டான், அன்றைக்கே என் சரித்திரம்

முடிந்திருக்கும். சரியான சமயத்தில் கர்த்தர் என்னை என்னுடைய வீட்டிற்குக் கொண்டு வந்தார், அதே வேளையில் சரியான நேரத்தில் ஊழியக்காரரையும் கர்த்தரே என் வீட்டிற்கு அழைத்துவந்தார். என் **தாய்** வீட்டிலிருந்து என்னை **எல்ஷட(த)ாய்** வீட்டிற்கு அதாவது சர்வ வல்லவரின் ஜெப வீட்டிற்குக் கூட்டிச் சென்றார்கள். அன்றைக்கு ஒரேயொரு பிரசங்கத்தைக் கேட்டேன். அன்றைக்கே என் வாழ்க்கையை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தேன். கர்த்தர் என்னோடு தொடர்ந்து பேசினார். நான் முழுநேர ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன்.

அந்த ஆரம்ப நாட்களில் ஏறக்குறைய 7 வருஷ காலங்கள் **பாஸ்டர் சுந்தரம் ஐயா** அவர்களோடு இருந்தேன். அந்தக் காலங்களை என்னால் மறக்கவே முடியாது. பசுமரத்தில் அடித்த ஆணிபோல இன்றைக்கும் அவை என் மனதைவிட்டு நீங்காதிருக்கின்றன. ஒருவேளை அந்தத் தேவ மனிதர் என்னை நடத்திய வழிகள் சற்றுக் கடினமானவைகளாக இருந்தாலும், இன்றைக்கு நான் இப்படி இருப்பதற்கு அவரே பிரதானமான காரணமாக தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கிறார் என்று என்னால் தைரியமாகச் சொல்லமுடியும். அந்தத் தேவ தாசருக்காக என் தேவனைத் துதிக்கிறேன். அந்தத் தேவ மனிதர் என் வாழ்க்கையில் படிப்பித்த பாடங்கள் என்னைத் தேவன் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தன. "உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபி.13:17) என்ற வசனத்தின்படி கீழ்ப்படிந்து செயல்பட்ட என் வாழ்விலே தேவனுடைய கரம் நன்மைக்கேதுவாகச் செயல்பட ஆரம்பித்தது.

## ஆவடியில் ஓர் அஸ்திபாரம்

என்னுடைய 28வது வயதிலே எனக்குத் திருமணம் நடந்தது. **பாஸ்டர் சுந்தரம் ஐயா** அவர்கள் எனக்காக எல்லாவற்றையும் பொறுப்பெடுத்தார்கள். ஐயா என்னோடு இருக்கிற வரைக்கும் எனக்குக் குறையே இருக்காது என்ற அசைக்க முடியாத விசுவாசம் எனக்குள் இருந்தது. பாஸ்டர் நம்மோடு இருக்கிறார் எனவே பணக் கஷ்டமோ, பாடுகளோ எதுவும் நமக்கு இருக்கப் போவதில்லை என்பதாக நினைத்துக்கொண்டிருந்தேன்.

எனது திருமணத்திற்கான செலவுகள் எல்லாவற்றையும் பாஸ்டர் அவர்களே செய்தார்கள். திருமணத்திற்குப் பின் என்னை மறுவீட்டிற்கு அனுப்பினார்கள், மாமனார் வீட்டிலிருந்து வந்ததும் சென்னையைச் சுற்றிப் பார்க்க எங்களை அழைத்துச் சென்றார்கள். எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்து, ஒருவார காலம் எங்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று மகிழ்ச்சிக் குள்ளாக்கினார்கள். பின்னர் ஒரு நாள் தனது காரில் எங்களுக்கு வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டு எங்களை ஆவடிக்குக் கூட்டிச் சென்றார்கள். ஆவடியில் இறக்கிவிட்டு நன்றாக ஊழியத்தைச் செய்யுங்கள், உற்சாகமாக ஊழியம் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு ஜெபம்பண்ணுவோமா என்று கேட்டார்கள். சரி ஐயா ஜெபியுங்கள் என்றோம். ஜெபித்தார்கள். எப்போதும் ஒரு Handbag வைத்திருப்பார்கள். அதிலிருந்து நூறு ரூபாயை எடுத்தார்கள், எழுந்து நின்றுகொண்டு சொன்னார்கள், இன்றையிலிருந்து புரசைவாக்கத்தில் ஒரு கிழவன் இருக்கிறான் என்பதை நீங்கள் இருவரும் மறந்துவிடவேண்டும் என்றார்களே பார்க்கணும். அதோடு அவர்கள் சொன்னார்கள் **கர்த்தர் கொடுத்தால் இரண்டு பேரும் சாப்பிடுங்க. இல்லாவிட்டால் இங்கேயே சாவுங்க!** இந்த வார்த்தையோடு அவர்கள் கார் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

7 ஆண்டுகளாக எத்தனையோ வாக்குத் தத்தங்களைப் பெற்று உற்சாகமடைந்த நான் இதுவரை பெற்றிராத ஒரு வாக்குத் தத்தத்தைப் பாஸ்டர் அவர்களிடமிருந்து அன்றைய தினம் பெற்று அதிர்ச்சியடைந்தேன். ஒரு வாக்குத்தத்த அட்டையைக் கொடுத்து **பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்** தைரியமாக ஊழியம் செய் என்று சொல்லியிருக்கலாமே! இப்போதைக்கு இந்த நூறு ரூபாயைப் பிடி அப்புறம் மாதா மாதம் ஏதாவது உனக்கு உதவி செய்கிறேன், இந்த ஆவடியில் கண்ணீர் வடி ஆண்டவர் கைவிடமாட்டார், விசுவாசத்தோடிரு என்று சொல்லியிருக்கலாமே! எங்களைக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டதைப் போலிருந்தது. கர்த்தர் கொடுத்தால் சாப்பிடுங்க இல்லாவிட்டால் இங்கே சாவுங்க என்று சொன்னாரே இதைக் கொஞ்சம்



முன்னால் சொல்லியிருந்தால் ஆவடிக்கே வந்திருக்க மாட்டேனே என்று என் மனம் அடித்துக்கொண்டது.

திருமணத்திற்கு முன் என்னுடைய மனைவி அரசாங்கப் பள்ளியிலே ஆசிரியையாகப் பணியாற்றியவர்கள். அவர்களைக் கட்டாயப்படுத்தி, ஊழியக்காரனைத் திருமணம் முடித்தால் வேலையை விட்டுவிடவேண்டும் என்று பாஸ்டர் அவர்கள்தான் சொன்னார்கள். அவர்களும் பாஸ்டர் இட்ட கட்டளையை உடனே ஏற்றுக்கொண்டு ராஜினாமா செய்துவிட்டார்கள். கூடவே என்னிடம் Gratuity, P.F. என்று எந்தப் பணமும் வாங்கிக்கொண்டுவரக் கூடாது என்றும் சொல்லிவிட்டார்கள். அது அவரது அப்பாவுக்கு உரியது, அதைக் கொடுத்துவிடவேண்டும் என்றார்கள். இதுவே பாஸ்டர் அவர்களது கட்டளை. அந்தக் கட்டளையை ஏற்றுக் கீழ்ப்படிந்த நான் அந்தப் பணம் எதையும் கொண்டு வரவில்லை. எனக்கொருவர் இருக்கிறார், அவர் இருக்கிற வரை புரசைவாக்கத்தில் எனக்குக் கவலையே இல்லை என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தேன். அதுதான் எனது விசுவாசமாகவும் இருந்தது. இப்போது அதே பாஸ்டர் சொல்கிறார், கர்த்தர் கொடுத்தால் சாப்பிடுங்க, இல்லாவிட்டால் சாவுங்கள் என்று! எங்கள் நிலைமையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இன்றைக்கு இருக்கிற அலங்கார ஆவடி இல்லைங்க. 40 வருஷத்திற்கு முன் சாவடி போல இருந்த ஆவடியைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அந்த ஆவடியில் கர்த்தர் எங்களைச் சாகடிக்கவில்லை மாறாக, கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுக்கு இரங்குகிற கர்த்தர் எங்களுக்கும் இரங்கினார். கர்த்தர் எங்களைப் போஷித்தார். தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

திருமணத்திற்கு முன் 7 ஆண்டுகள் நான் வசனம் கேட்டேன். ஆனால் ஒரு முக்கியமான சத்தியம் எனக்கு விளங்கவில்லை! கர்த்தர் கொடுப்பார், கர்த்தர் போஷிப்பார் என்ற சத்தியம் எனக்குத் தெரியவில்லை. என்னைப் போன்ற ஆட்களுக்கு இப்படிக் குட்டினால்தான் விளங்கும் என்று நினைக்கிறேன். எந்த ஆவடியில் நான் மூட்டை சுமந்தேனோ இன்றைக்கு அதே ஆவடியில் கர்த்தர் என்னையும், குடும்பத்தையும், ஊழியங்களையும் அளவில்லாமல் ஆசீர்வதித்து, உயர்ந்த அடைக்கலத்தில் வைத்திருக்கிறார். **"ஆம், சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்"** (சங்கீதம் 46:7).

எனக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தம் **கர்த்தர் கொடுப்பார், அவர் ஒருபோதும் கைவிடாதவர்!** இந்த வாக்கைப் பிடித்துக்கொண்டு நானும் என் மனைவியும் கைகளைக் கோர்த்துக்கொண்டு முழங்காலில் நின்று ஜெபித்தோம். எங்கள் கரங்களில் பாஸ்டர் கொடுத்துவிட்டுச் சென்ற ஒரேயொரு 100 ரூபாய் நோட்டுதான் இருந்தது. அதை வைத்து எப்படி வாழ்க்கையை நடத்துவது? அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்ற நிலையில் கர்த்தரை நோக்கிப் பார்த்து, எங்கள் கண்ணீரைக் கர்த்தரின் பாதத்தில் ஊற்றிவிட்டோம். நம்முடைய தேவன் ஒருபோதும் கைவிடாத தேவன். அவர் நம்மை எப்படியும் காப்பாற்றுவார். நான் இன்றளவும் ஒவ்வொரு நாளும், **ஆண்டவரே எனக்குப் போதுமானது இருக்கிறது, எனக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறது** என்று சொல்லித் துதிக்கிறேன்.

## உயர்வும் உறவும்

தேவனோடு உங்கள் உறவு சரியாய் இருக்குமானால் உங்களுக்கு எந்த வெளிநாட்டுக்காரரும் பணம் கொடுக்க வேண்டியதில்லை, நீங்கள் பிறருக்கு உதவி செய்யும்படி தேவன் உங்களை உயர்த்துவார். உங்களுக்கு வேண்டியதெல்லாம் இருக்கும்படி செய்வார். போதுமானதெல்லாம் உங்களுக்கு இருக்கும்படி உங்களை ஆசீர்வதித்து உங்கள் சிரசைச் சிங்காரிக்க அவர் வல்லவராயிருக்கிறார். யோசேப்பின் வாழ்க்கை இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இன்றைக்கு அநேகர் நினைக்கிறார்கள், "யாராவது ஒரு வெளிநாட்டுக்காரன் நம்ம கிட்ட சிக்க மாட்டானா? நம்ம ஊழியத்திற்குப் பணம் கொடுக்க மாட்டானா'' என்று! எங்கள் சபைக்கு வந்தவர்களுக்கு நாங்கள் கொடுத்து அனுப்பியிருக்கிறோம். நமக்கு ஒரு பெரிய நாடு **(Foreign Country)** இருக்கிறது. ஒரு வெளிநாட்டுக்காரரைவிட, நம் தேவன் பெரியவராய் இருக்கிறார். அவர் தமது நல்ல பொக்கிஷ சாலையைத் திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் நம்மை நிரப்புகிறவர் (உபாகமம் 28:12). அவரது பலகணிகள் எப்போதும் திறந்து இருக்கிறது (மல்கியா 3:10) என்பதை மறந்துபோகாதீர்கள்.

ஆண்டவர் ஒரு பெரிய இரகசியத்தைச் சொல்லிவிட்டுப் போனார். வேதத்தில் லூக்கா 17-ம் அதிகாரம் 7,8 வசனங்களை அடிப்படையாகக்

கொண்டு ஒரு காரியத்தை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தையை மேய்த்து வயலிலிருந்து வரும்போது எஜமான் அவனை நோக்கி, நீ முன்பு போய்ச் சாப்பிட்டு வா என்று அவனுக்குச் சொல்வானோ என்கிறார். ஊழியக்காரன் வயலுக்குப் போய் உழுகிறான், அல்லது மந்தையை மேய்க்கிறான். இல்லையென்றால் வயலிலிருந்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஊழிய ஸ்தலம் என்ற வயலுக்குப் போய் உழுதீர்களோ, வயலில் வேலை செய்தீர்களோ, மந்தையை மேய்த்தீர்களோ ஏதாவது ஒரு வேலையைச் செய்து அந்த நாளின் ஊழியத்தை முடித்துவிட்டுச் சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பினால் உங்களுக்குச் சாப்பாடு கிடைக்கும். ஆனால் ஆண்டவர் இந்த வசனத்தில் என்ன சொல்லுகிறார் என்றால் அப்படி வயலிலிருந்து வருகிற வேலைக்காரனுக்கு எஜமான் சாப்பாடு கொடுக்க மாட்டாராம். இது என்னடா வித்தியாசமான எஜமான்! இது என்னடா வினோதமான ஊழியம் என்று நினைக்கக்கூடாது. அந்த எஜமான் வேலைக்காரனை நோக்கி நீ போய் எனக்குச் சாப்பாடு ஆயத்தமாக்கிக் கொண்டுவந்து நான் சாப்பிட்டு முடிக்கிறவரைக்கும் எனக்கு முன்பாக கையைக் கட்டிக்கொண்டு நில். நான் சாப்பிட்ட பிறகு உனக்குச்சாப்பாடு கிடைக்கும் என்று சொல்லுவான் என்று இயேசு கூறியுள்ளார். ஆவிக்குரியவர்கள் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதிகாலையில் எழும்பி வயலுக்குப் போய் என்னதான் வேலை செய்தாலும், ஊழியம் செய்தாலும் சாப்பாடு கிடைக்காது. வேலையை முடித்துவிட்டு வந்து எஜமானுக்கு முன்பாக நின்றால் மட்டுமே சாப்பாடு உண்டு. கையைக் கட்டிக்கொண்டு நில், நான் உன்னைப் பார்க்கட்டும் என்பதுபோல எஜமான் பேசுவதாக இயேசு கூறியுள்ளார்.

## ஊழியத்தின் இரண்டு பகுதிகள்

அருமையான தேவ ஊழியரே, ஊழியத்தில் இரண்டு பகுதி இருக்கிறது. ஒன்று மேய்க்கிறது. இன்னொன்று முன்னால் நிற்கிறது. இந்த இரண்டு வேலையையும் சரியாய் நிறைவேறினால்தான் சாப்பாடு கிடைக்கும். என்ன சாப்பாடு? சாதா சாப்பாடு அல்ல, ஜனதா சாப்பாடும் அல்ல, ராஜ சாப்பாடு! அல்லேலூயா.

இன்றைக்கு அநேகர் சொல்கிறார்கள், நாற்பது வருஷ காலம் ஊழியம் செய்தாயிற்று, 50 வருஷ காலம் ஊழியம் செய்தாயிற்று. மந்தையை மேய்த்து, உழுது, விதைத்தேன், ஆனால் ஒன்றுமே விளையவில்லை என்கிறார்கள். மந்தையை மேய்க்கிறதினாலோ, பாஸ்டராகப் பணி செய்கிறதினாலோ ஒன்றும் கிடைத்துவிடாது. மந்தையை மேய்த்த பின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற ஊழியரே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். கர்த்தருக்கு முன்பாக நிற்கிறதென்றால், அது தேவ சமூகத்தில் காத்திருந்து, ஜெபித்து, தேவ சத்தம் கேட்கிற அனுபவத்தைக் குறிக்கிறது. அப்படிப்பட்டவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மந்தையை மேய்ப்பதையும், எஜமானுக்கு முன்பாக நிற்பதையும் ஒழுங்காகச் செய்தால் என்னுடைய சாப்பாடு உனக்குக் கிடைக்கும், என் மேன்மை உனக்குக் கிடைக்கும், சிரசுக்குச் சிங்காரம் தேடிவரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். மேய்ப்பதும் பின்பு ஏய்ப்பதும் ஒரு உண்மையான ஊழியரிடத்தில் காண முடியாத சுபாவங்கள். உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தேவ ஊழியர்கள் மேய்கிறதிலும் பின்பு கர்த்தருக்கு முன்பாக நிற்கிறதிலும் கவனமாயிருப்பார்கள்.

மந்தைக்காகப் படுகிற பிரயாசங்களும், கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நிலவரமும் அத்தியாவசியமான அனுபவங்கள். இந்த இரண்டும் நம் ஊழியத்தில் இணைந்து காணப்படாவிட்டால், நம்முடைய வாழ்க்கை என்கிற வண்டி, தடம் மாறிவிடும். ஊழியம் என்பது ஒத்தையடிப் பாதையல்ல. அது ஒரு இருவழிப் பாதை. ஊழியத்தையும், ஜெப ஜீவியத்தையும் கவனமாய்க் கையாளவேண்டும். வெளியே ஊழியத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். உள்ளே மனதைக் காத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய நாட்களில் விசுவாசத்தை மட்டுமே மையப்படுத்தி அதையே பெரிதுபடுத்தி JUST BELIEVE! THAT'S ENOUGH! என்று கற்றுக் கொடுத்து மாற்று வழியில் கூட்டிச் செல்கிறார்கள். சரியான தடத்தில் நாம் செல்ல வேண்டுமானால் நம்முடைய பாடுகளும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற ஊழியமும் ஒன்றாய் இருக்க வேண்டும். விசுவாசம் என்பது ஆவியின் கனி ஒன்பதில் ஒன்று. விசுவாசத்தை மட்டுமல்ல, அதோடு இணைந்த மற்ற ஆவிக்குரிய அனுபவங்களையும் (கலா.5:22,23) நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். யோசேப்பு ஆவியின் கனி அனைத்தையும் உடையவனாய் இருந்ததால் அவனது சிரசைத் தேவன் சிங்காரித்தார். அவன் சகோதரர்களுக்குள்ளே விசேஷித்தவனாய் விளங்கினான்.



நம்முடைய வாழ்க்கையில், ஊழியப் பாதையில் எப்பொழுதும் ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்பதை நாம் அடிக்கடி உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் கர்த்தரோடிருந்தால் கர்த்தர் நம்மோடிருப்பார்.

## சுற்றிவளைக்கப்படும் சிந்தனை மண்டலம்

பிலிப்பியர் 4:8,9- ஐ வாசியுங்கள். “கடைசியாகச் சகோதரரே உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களோடிருப்பார்” என இந்த வேத பகுதி நமக்குச் சுட்டிக் காண்பிக்கிறது.

உங்கள் சிந்தனையும் செயலும் மாற்றம் காணுமானால் அப்பொழுது கர்த்தர் உங்களோடிருப்பார். நாம் எதைச் சிந்திக்கிறோம் எதைச் செயலாற்றுகிறோம் என்பது முக்கியம். சிந்திக்க வேண்டிய காரரியங்கள் என்ன என்பதைப் பற்றி வேதத்தில் எழுதப்பட்டதை மேலே வாசித்தோம். வீட்டைப் பற்றியோ, குடும்பத்தைப் பற்றியோ, நாளையைப்பற்றியோ சிந்திக்கவேண்டிய அவசியமில்லை. நமக்கு எதிராய்ச் செயல்படுகிறவர்களை என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. சிந்திக்கவேண்டிவை எவை என்றால், உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியம், புகழ் இவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் கேட்கிற சத்தியத்தின்படி செய்யுங்கள். அப்போது கர்த்தர் உங்களோடிருப்பார். கர்த்தர் உங்களோடிருப்பாரானால் நீங்கள் சதிகளைத் தாண்டி, யோசேப்பைப் போல சாதிக்கலாம்.

கர்த்தர் நம்முடைய சிந்தனையைப் பார்க்கிறார். அதோடு நம்முடைய செயலையும் கவனிக்கிறார். இந்த இரண்டும் ஆவிக்குரிய பிரகாரமாய் இருக்குமானால் ஊழியர்களாகிய நாம் தைரியமாய்ச் சொல்லலாம் கர்த்தர் என்னோடிருக்கிறார் என்று. ஆண்டவரே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் (சங்.139:1,2) என்று தாவீது எழுதிவைத்திருக்கிறார். ஒரு ராஜா எத்தனையோ காரியங்களை யோசிக்கவேண்டியிருக்கும். உதாரணமாக ஒரு பிரதம மந்திரியின் மனதில் எத்தனை நினைவுகள் இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர் என்ற தாவீதின் கூற்றின்படி நாம் எதை நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக்கூடக் கர்த்தர் அறிகிறவராய் இருக்கிறார். அப்படியானால் நம்முடைய சிந்தனையில் கூட ப் பரிசுத்தம் காணப்படவேண்டும்.

நம்முடைய பேச்சை ஒலிப்பதிவு செய்ய, நம்முடைய அசைவுகளை ஒளிப்பதிவு செய்ய ஏராளமான எலக்ட்ரானிக் எந்திரங்கள், சாதனங்கள், **CCTV** கேமராக்கள் வந்துவிட்டன. ஆனால், நம்முடைய சிந்தனையைப் பதிவு செய்து படம் பிடித்துக் காட்ட ஏதாவது ஒரு கருவி இருக்குமானால் நம்முடைய கதி என்னவாகும்? இரவெல்லாம் படுக்கையில் உட்கார்ந்து யோசிக்கிற காரியங்கள், சிந்தனைகளைப் பதிவு செய்யக் கருவிகள் இருக்குமானால் விவாகரத்துக்களும், பயங்கரமான விளைவுகளும் இப்போது இருப்பதைவிடப் பல மடங்கு பெருகிப்போகும்.

நம்முடைய யோசனைகள் சரியானவை தானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெளியே பார்ப்பதற்கு மிகவும் யோக்கியமானவர்களாகக் காணப்படுகிறோம். ஆனால் நம்முடைய எண்ணங்கள் சரியானவைகள் அல்ல. எண்ணங்களிலே இன்னும் பரிசுத்தம் தேவைப்படுகிறது (வெளி 22:11).

## ஸ்கேன் ரிப்போர்ட்

பிலிப்பு நாத்தான்வேலிடம் மேசியாவைக் கண்டேன் என்று சொன்னான். நாசரேத்திலிருந்து நீதியா? நாசரேத்திலிருந்து நன்மையா? என்று கேட்ட நாத்தான்வேலுக்கு நறுக்கென்று ஒரு பதிலைத் தந்தான் பிலிப்பு. **நீ வந்து பார்** என்று சொல்லி பிலிப்பு நாத்தான்வேலைக் கூட்டிக்கொண்டு, ஆத்தும ஆதாய வீரனைப்போல,

இயேசுவிடம் வருகிறான். பிலிப்பு வாயைத் திறக்குமுன் இயேசு நாத்தான்வேலைக் கண்டவுடன், இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார் (யோ.1:47). என்னை எப்படி அறிவீர் என்று அவன் கேள்வி எழுப்பினான். **கேள்**வியினால் **வேள்**வி நடத்தும் நாத்தான்**வேல்** ஆச்சரியப்படும்போது இயேசு சொன்னார், நீ அத்திமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தபோதே உன்னைக் கண்டேன் என்றார்.

நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் தனிமையாய் உட்கார்ந்திருந்தான். நாம் தனிமையாய் உட்கார்ந்திருந்தால் எதை யோசித்துக் கொண்டிருப்போம்? இன்றைக்குச் சாயங்காலம் எங்கே போவது? நாளைக்கு என்ன செய்வது? அருமையானவர்களே, தனிமைதான் யோசிப்பதற்குச் சிறந்த இடம். அத்திமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்த நாத்தான்வேலை இயேசு நாதர் பார்த்துக்கொண்டே இருந்தார். அவன் எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். அந்த யோசனையை ஸ்கேன் பண்ணிப் பார்த்து ரிப்போர்ட்டைக் கூறுகிறார்; **இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்!** ஆம், அவன் யோசனையில்கூடக் கபடு இல்லாதவன். இப்படியெல்லாம் ஊழியர்களாகிய நம்மை ஸ்கேன் பண்ணி இயேசு நாதர் ரிப்போர்ட் வெளியிட்டால் என்னவாகும்? இதை என்றைக்காவது யோசித்ததுண்டா?

இன்றைக்குச் செயலில் உத்தமராய் இருக்கிற அநேகர், சிந்தனையில் உத்தமராய் இல்லை என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன். நம்முடைய சிந்தனைகளை ஆண்டவர் இன்னும் வெளியே கொண்டு வரவில்லை. சில வேளைகளில் நமது தனிப்பட்ட ஜெபங்களில் அதை வெளிப்படுத்துகிறார். ***சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந் தீர்க்குங் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந் தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்*** (பிரசங்கி 3:17) என்று ஞானி எழுதுகிறார். நம்முடைய நினைவுகளையும்கூட ஆண்டவர் நியாயந் தீர்க்கிற காலம் உண்டு என்பதை மறந்துபோக வேண்டாம். விசேஷித்தவர்களாக நாம் மாறுவதற்கு நம்முடைய எண்ணங்களைச் சிறைப்படுத்தவேண்டியது அவசியமாயிருக்கிறது.

## எண்ணங்களைச் சிறைப்படுத்த என்ன வழி?

**வீண் சிந்தனைகளை வெறுத்து உம்முடைய வேதத்திலே பிரியமாயிருக்கிறேன்** (சங்.119:113) என்றார் தாவீதரசன். பரிசுத்த வேதாகமம்தான் நம்முடைய வீண் சிந்தனைகளை வெறுப்பதற்கு ஒரேவழி. 40 நாள் உபவாசம் போட்டு முடித்தவுடன் எண்ணங்களில் எழில்மிகு மாற்றங்கள் ஏற்பட்டுவிடுவதில்லை. இன்றைக்குக் கர்த்தருடைய வேதத்திற்குக் கனம் கொடுக்கிற ஊழியக்காரர்கள் நம்மில் எத்தனைபேர் உண்டு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 25 வருஷ காலம் நீங்கள் ஊழியம் செய்திருப்பீர்களானால் குறைந்தது 25 முறையாவது வேதத்தை முழுவதுமாக வாசித்து முடித்திருக்க வேண்டும். வருஷத்திற்கு ஒரு முறை எங்கு போகிறீர்களோ என்னவோ, ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை ஒரு வாக் (Walk) போய்விட்டு வாருங்கள்.

ஒரு டாக்டர் வீட்டுக்குப் போய்ப் பாருங்கள். அவருடைய அறையில் ஒரு நூலகத்தையே வைத்திருப்பார். ஏராளமான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மருத்துவ சம்பந்தமான புத்தகங்களைப் பார்த்தால் ஒவ்வொன்றும் 4 வேதாகம ஒத்தவாக்கிய விளக்கப் புத்தகத்தை ஒன்றாய்ச் சேர்த்தால் எத்தனை பெரிதாய் இருக்குமோ அவ்வண்ணமாக இருக்கும். இதுபோல அநேகப் புத்தகங்களைப் படித்தால்தான் அவர் சிறந்த மருத்துவராக முடியும். தொடர்ந்து நோய்களைப்பற்றிய நுணுக்கங்களைப் படித்துக்கொண்டே இருந்தால்தான் அவர் அதற்கு வைத்தியம் பார்த்து அறுவடை செய்துகொண்டே இருக்க முடியும். வக்கீலைப் பாருங்கள் மலை போலப் புத்தகங்களைக் குவித்து வைத்திருப்பார்கள். அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற பல நாட்டுச் சட்டங்களை ஆராய்ந்து இங்கே உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்பார்கள். எல்லா Lawவையும் படித்தால்தான் Lawyer ஆக முடியும். பொறியாளரைப் பாருங்கள், 4 ஆண்டுகள் பல்வேறு புத்தகங்களைப் படித்துப் படித்துப் பின்னர் எஞ்சினியராகிறார்கள். எஞ்சினியரிங் படித்துவிட்டு ஒரு சிலர் ரூ.10000 சம்பளம் வாங்குகிறார்கள். ரூ.10000 சம்பளத்திற்கே பல்வேறு புத்தகங்களைப் படிக்கிறார்கள். ஊழியர்களாகிய நாம் 1500 பக்கங்கள் மட்டுமே உள்ள இந்த ஒரு வேதாகமத்தை முழுவதுமாக ஒரு முறைகூடப் படிக்கவில்லையென்றால் அது எத்தனை பரிதாபமாயிருக்கும்? நம்முடைய சம்பளம் ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வேதத்தை வாசிக்கவேண்டிய பிரகாரம் இன்னும் வாசிக்கவில்லை. அதுவே நம்முடைய குறைவுகளுக்குக் காரணம்.



இன்றைக்கு ஏன் ஊழியக்காரன் வீட்டில் வறுமை? ஊழியக்காரர்களில் எத்தனைபேர் வருஷத்திற்கு ஒரு முறையாவது இந்த வேதத்தை வாசித்து முடிக்கிறார்கள்? 365 நாட்களில் 1500 பக்கங்களை முடிக்க முடியவில்லை என்றால் நமது நிலைமை எப்படியுள்ளது என்பதைப் பாருங்கள்!

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்; நாள் முழுவதும் அது என் தியானம் (சங்.119:97). இது சங்கீதக்காரனின் அனுபவம். இந்த வேதத்தில் ஒரு மனுஷன் பிரியமாய் இருந்தால் அவனுக்கு இடறலே இல்லை. அவனுக்கு மிகுந்த சமாதானம் (சங்.119:165). இன்றைக்கு அதிகமானபேர் **வேதத்தைப்பற்றிப்** படித்துவைத்திருக்கிறார்கள். ஆனால், வேதத்தைப் படிக்கவில்லை. சரித்திரம் படித்ததுபோல வேதத்தை அநேகர் மூளை அறிவினால் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லுவேன், ஒவ்வொரு நாளும் இதுவே உங்களது உணவு, இதுதான் உங்கள் வாழ்வு. இந்த வேதத்தோடு அதிகமான நேரங்களைச் செலவு செய்யுங்கள். வேத வாசிப்பு உங்கள் வீண் சிந்தனைகளை வெறுக்கச்செய்யும். ஓய்ந்திருக்கும் மனம் சாத்தானின் தொழிற்கூடம் என்பதை உலக மனுஷனே ஒத்துக்கொள்கிறானே!

## போஷாக்குத் தரும் வேதம்

மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று ஆண்டவர் சொன்னார் (மத்தேயு 4:4). வேத வசனங்களை வாசித்துப் பாருங்கள், இது உங்களை நிச்சயம் பிழைப்பூட்டும். இந்த பைபிள் ஒன்றை வைத்துத் தான் நான் இன்றுவரை பிழைத்துக் கொண்டிருக்கிறேன். வீண் சிந்தனைகளை வெறுத்து நாம் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டுமானால் கர்த்தர் நமக்குக் கொடுத்த ஒரு பெரிய பொக்கிஷமாகிய இந்த வேதத்தை நேசிக்கவும் வாசிக்கவும் வேண்டும். வேறு எதைச் செய்தாலும் வீண் சிந்தனைகளை வெல்ல முடியாது. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது, சரீரத்தை வளைத்து அடக்கி ஒடுக்கிப் பிரயாசப்படுவதினால் வீண் சிந்தனைகளை வெறுக்க முடியாது.

ஆண்டவர் கிருபையினால் இந்த வேதத்தை 100 முறைக்கு மேல் வாசித்துவிட்டேன், இன்னமும் வாசித்துக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கும் இந்த வேதம் எனக்குப் புதுமையாகத்தான் காணப்படுகிறது. புதுசா ஒன்றைக் கற்றுக்கொள்வதைப்போலக் கற்றுக்கொண்டுவருகிறேன். என்னுடைய சபையில் கடந்த 39 வருஷத்தில் இந்த வேதப்புத்தகத்திலிருந்து 4000-க்கும் மேலான செய்திகளை எடுத்துப் பிரசங்கித்திருக்கிறேன். என்னுடைய சபையில் உட்கார்ந்து வசனம் கேட்கிற விசுவாசிக்குப் போன வாரம் நான் கொடுத்த செய்தி புதுசு. பழைய சோறுக்கு இடமே இல்லை. வாரந்தோறும் புதிய செய்தியைக் கொடுத்துவருகிறேன்.

இந்தச் செய்தியை ஊழியக்காரர்கள் அநேகம் பேர் வாசிப்பீர்கள் என்று நம்புகிறேன். எனவே மனம் திறந்து நான் பேசுகிறேன். உங்கள் சபையை எப்படிப் போஷிக்கிறீர்கள்? ஊழியக்காரன் தேவன் கொடுத்த பொக்கிஷமாகிய வேதத்தோடு அதிகமான நேரத்தைச் செலவு செய்ய வேண்டும். இந்த வேதம்தான் நம்மை வாழவைக்கும் புத்தகம், இதுதான் நம்மைப் போஷிக்கிற புத்தகம். இந்த வேதத்தோடு நீங்கள் இரவும் பகலும் செலவு செய்வீர்களானால் வேதம் சொல்கிறது, துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும், அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:1-3). கர்த்தருடைய வேதத்தில் மாத்திரம் ஒருவன் பிரியமாயிருந்து இரவும் பகலும் தியானித்துக்கொண்டிருந்தால் நீங்கள் எதைச் செய்வீர்களோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார். உங்களை ஒருபோதும் திக்குமுக்காட விடமாட்டார்.

எங்களுடைய விசுவாசிகள் சொல்வார்கள், பாஸ்டர் பிரசங்க பீடத்திலிருந்து சொல்லிவிட்டாரானால் அதை எப்படியும் செய்து முடித்துவிடுவார் என்பார்கள். செய்வதெல்லாம் என்று மட்டுமல்ல, சொல்லுவதெல்லாம் வாய்க்கும்.

அதேபோல நான் சொன்னதைச் செய்துமுடிக்கக் கர்த்தர் கிருபை தருவதை என் ஜனங்களும் இதுவரை கண்டுவருகிறார்கள். காரணம் நான் எந்த வாக்குறுதி கொடுத்தாலும் வேதத்தின் அடிப்படையில்தான் கொடுக்கிறேன். கர்த்தர் தமது வாக்கினால் சொன்னதைத் தமது கரத்தினால் இதுவரை நிறைவேற்றி வருகிறார் (1இரா.8:24). தேவன் நம்மை விசேஷித்தவர்களாக்க எத்தனையோ வழிகளைக் கையாள்கிறார். தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

## சந்திப்பதில் முந்திக்கொள்பவர்

வீண் சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியமாயிருக்கும்போது முதலாவது நம்மைச் சந்திக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தரே. இரண்டு பேர் தேவனுக்குப் பலி செலுத்த வந்தார்கள். ஒருவன் ஆபேல் இன்னொரு வன் அவன் சகோதரனாகிய காயீன். இவர்கள் இரண்டு பேரும் தேவ சமூகத்தைவிட்டுத் துரத்தியடிக்கப்பட்ட ஒரு குடும்பத் திலிருந்து வந்தவர்கள். அவர்களுடைய தாய் ஒருவேளை இப்படிச் சொல்லியிருப்பாள்; நாம் ஒரு அன்புள்ள தேவனை ஆராதித்தோம், ஆனால் அந்த அன்புள்ள தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போய்விட்டோம். அவர் நம்மைத் துரத்தியடித்துவிட்டார், அவர் ரொம்ப இரக்கமுள்ளவர், மன்னிக்கத் தயை பெருத்தவர், அவர் மிகுந்த கிருபையுள்ளவர் என்றெல் லாம் அந்தத் தாயார் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகையினால் அந்த இரண்டு பேரும் காணிக்கையை எடுத்துக்கொண்டு பலி செலுத்த வந்தார்கள் (ஆதி.4:3-7). இந்தச் சம்பவத்தை நாம் நன்கு அறிவோம். இதில் ஒருவனுடைய காணிக்கையைத் தேவன் அங்கீகரித்தார். இன்னொருவனுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை. இதனால் காயீனுடைய முகநாடி வேறுபட்டது. ஆபேலுடைய காணிக்கையைத் தேவன் அங்கீகரித்தார் என்றவுடனேயே காயீனுடைய உள்ளத்திலே கசப்பு வந்துவிட்டது. கசப்பு என்று ஒன்று உள்ளத்திற்குள்ளே நுழையுமானால் முதலாவது முகநாடியை அது பாதிக்கும், ஒரு கொடூரமான பார்வையை அது வெளிப்படுத்தும். முகநாடி வேறுபட்ட அடுத்த நொடியில் அவனை முதலில் சந்தித்தவர் தேவனே! உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மையில்லையோ என்று அவர் கேட்டார்.

காணிக்கை கொண்டுவருகிற மேன்மையைக் காட்டிலும் நீ நன்மை செய்கிறது உனக்கு மேன்மை. ஆபேல் காணிக்கையைப் படைத்ததினால் ஒரு மேன்மையை அடைந்தான், ஆனால் உனக்கொரு மேன்மையை வைத்திருக்கிறேன், நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை உண்டு என்று சொன்னார். நாசம் பண்ணிவிடாதே நன்மைசெய் என்ற தேவனின் ஆலோசனையை காயீன் அலட்சியப்படுத்தி விட்டான்.

## சந்நிதி இழப்பு சந்ததிக்கே ஒரு பேரிழப்பு!

நான் இந்தச் சம்பவத்தில் கற்றுக்கொண்டது என்னவென்றால், காயீனுடைய சிந்தனையில் **வேறுபாடும் மாறுபாடும்** வந்தவுடனே **முரண்பாடு**களால் மாறிப்போயிருந்த அவனது முகத்தை முதலாவது சந்தித்தவர் கர்த்தரே. முதல் சந்திப்பில் அவன் முகங்குப்புற விழுந்து தன்னைத் திருத்தியிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் நடைபெறவில்லை. எனக்கு விசேஷித்த நன்மை ஏதும் தேவையில்லை என்பவர்களைத் தேவன் தேடுவதில்லை. நம்முடைய ஆவிக்குரிய சிந்தையில் ஏதாவது ஒரு வைராக்கியத்திற்கும் கசப்புக்கும் இடமளிப்போமானால் முதலாவது நம்மைச் சந்திக்கிறவர் கர்த்தர் என்பதை மறந்து போகாதீர்கள். நாம் அதிலிருந்து வெளியே வந்து விட்டோமானால் நாம் தப்பிவிட்டோம் என்றுதான் சொல்லுவேன். திரும்பவும் நீங்கள் அந்தக் கசப்புக்குள்ளே, வைராக்கியத்திற்குள்ளே செல்வீர்களானால் ஆபத்து உங்களுக்குக் காத்திருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் வீணாக அலையவேண்டிய மனுஷராய்ப் போவீர்கள். அவருடைய சந்நிதானத்தை இழந்து அலைகிற மனுஷராயிருக்க நேரிடும்.

தேவனுடைய சந்நிதானத்தை ஒருவன் ''இழப்பதற்கு முன்'' என்ற வார்த்தையைக் கவனியுங்கள், அதாவது அதுவரைக்கும் அவன் தேவனுடைய சந்நிதியில் இருந்தான் என்றுதான் பொருள். எப்போது சந்நிதியை இழந்தான் என்றால் அவனுடைய சிந்தனையில் கேடுபாடுகள் நுழைந்தவுடன் தேவனுடைய சந்நிதியை இழக்கக்கூடிய அபாயம் நேரிட்டுவிட்டது. சந்நிதி இழப்பு சந்ததிக்கே ஒரு பேரிழப்பு!

"காயீனே உன் முகநாடி ஏன் வேறுபட்டது! நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ!'' என்ற எச்சரிப்பைத் தேவன் கொடுத்த நிமிஷமே அவன் தன்னைச் சரிப்படுத்தியிருந்தால் அவன் இந்த மாபெரும் இழப்பைச் சந்தித்திருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. அவனுடைய சிரசுக்கு வரவேண்டிய சிங்காரத்தை, நன்மையை, மேன்மையை அவன் இழந்துபோனான். சிந்தையில் மாறுபாடு வந்தவுடனேயே தேவன் நம்மைச் சந்திப்பார், உடன்தானே நாம் அதிலிருந்து விலகி, தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையென்றால் இழப்பைத் தவிர்க்க இயலாது.



## நள்ளிரவுச் சந்திப்பு

என்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். எனக்குத் திருமணமாகி 39 ஆண்டுகள் ஆகிறது. இதுவரைக்கும் என் மனைவியிடம் சொல்லாமல் நான் வெளியே போனதில்லை. என் மனைவி வாசிக்காமல் ஒரு கடிதத்தைக் கிழித்து எறிந்ததில்லை. எங்கே போனாலும் போகிற இடத்தையும், வருகிற நேரத்தையும் சொல்லாமல் நான் சென்றதில்லை. இது என்னுடைய அனுபவம்.

**பாஸ்டர் சுந்தரம்** ஐயா இருந்த காலத்தில் திங்கட் கிழமை தோறும் புரசைவாக்கும் சென்று தலைமைச் சபையில் அவரைச் சந்திக்கவேண்டும். சபைக்கடுத்த வேலைகளைச் சொல்லுவார், அதைச் செய்ய வேண்டும். கொடுக்கப்படுகிற கடமைகளைச் செய்துவிட்டுச் சாயங்காலம் வீடு திரும்புவது என் வழக்கம்.

ஒரு நாள் திங்கட் கிழமை காலை வீட்டை விட்டுப் புறப்படும்போது என் மனைவி **சுகந்தி**யிடம் இன்றைக்கு வேலை அதிகமாக இருக்கிறது, எல்லாவற்றையும் முடித்துவிட்டு அங்கேயே சாப்பிட்டுவிட்டு வருவேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். ஆனால், போன இடத்தில் சாயங்காலம் வரை ஆகிவிட்டது, நிறைய வேலைகள் இருந்ததால் சாப்பிடக்கூட எனக்கு நேரமில்லாமல் போனது. நேரடியாக வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று அங்கிருந்து வீட்டிற்குச் சென்றேன்.

ஆவடியில் என் வீட்டிலே மதியம் 2.30 மணியிலிருந்து என்னைச் சந்திக்க மூன்று பேர் காத்திருந்தார்கள். நான் அவர்களோடு வராந்தாவில் உட்கார்ந்து பேசினேன். என் மனைவி வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். எனக்கோ அகோரப் பசி. எனக்குப் பசிக்கிறது என்று சொல்வதற்கு எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டு அதை என் மனைவிக்குத் தெரியப் படுத்திக் கொண்டிருந்தேன். என் மனைவியோ பேசாமல் இருந்தார்கள். ஒருபோதும் அப்படி அவர்கள் இருந்ததில்லை. என்னுடைய முயற்சிகள் ஏதும் பலிக்கவில்லை. அவர்கள் புறப்படக்கூடிய நேரம் வந்தது எனவே ஒருவழியாய் அந்த மூன்று பேரையும் சமாளித்து ஜெபித்துவிட்டுக் கண்களைத் திறந்தேன், மேலும் 4 பேர் என்னைச் சந்திப்பதற்காகப் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தார்கள். என் மனைவி உள்ளே போய் அங்கிருந்து எட்டிப்பார்த்து விட்டு மீண்டும் வெளியே வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

இரவு எட்டு மணிவரை தொடர்ந்து இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தது. பயங்கரமான பசியோடு இருந்த எனக்கோ அவர்களுக்கோ காபிகூட வந்துசேரவில்லை. ஒருபோதும் என் மனைவி அப்படி இருந்ததில்லை. ஏனென்றும் எனக்குப் புரியவில்லை. இரவு 8 மணிக்குப் பசி உச்சக் கட்டத்திற்குச் சென்று மீண்டும் கீழே இறங்கிவிட்டது. எனக்கு மிகுந்த வருத்தம். 4 மணிக்கு வந்தோம், 8 மணிவரைக்கும் ஒரு கப் காபி கூட தரவில்லை, இது என்னுடைய சிந்தனையில் நுழைந்துவிட்ட கசப்பு. செயலில் நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இரண்டாவது கட்டமாக வந்த அந்த 4 பேருக்காகவும் ஜெபித்துவிட்டு 8 மணிக்கு வீட்டிற்குள் சென்றேன் துவையலும் ரசமும் இருந்தது. ஸ்தோத்திரம் பண்ணிச் சாப்பிட்டேன். களைப்பின் மிகுதியால் உறங்கிவிட்டேன். என் மனதில் என்ன பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால், 4 மணிக்கு வந்தோம் சாப்பிட்டீங்களா என்று கேட்கவில்லை, ஒரு கப் காபி கூடத் தரவில்லை! இவைகளையே சிந்தித்துக்கொண்டு தூங்கிவிட்டேன்.

உண்மை என்னவென்றால், அன்றைக்குப் பால்காரன் வரவில்லை. எனவே காலையில் வாங்கிய பாலிலிருந்து ஒரு கப் காப்பியை எனக்காக ஆயத்தம் செய்திருக்கிறார்கள். ஆனால் அங்கே இருந்ததோ 4 பேர். என்னோடு சேர்த்து 5 பேர் குடிக்கவேண்டுமானால் என்ன செய்ய முடியும்? ஒரு கப் காப்பியை எப்படி 5 பேருக்கு கொடுப்பது? ஒன் பை டூ என்று சொல்வார்கள், ஆனால் ஒன் பை பைவ் ஆக்குவது எப்படி? முதலாவதாக வந்த குரூப் என்னைப் பார்த்துவிட்டுச் சென்றதும் சூடு பண்ணி எனக்குக் கொடுக்கலாம் என்றிருந்தபோது அடுத்த 4 பேர் என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்ததால் அந்த

முயற்சியும் தோல்வியடைந்தது. இப்படியே சூடு பண்ணி சூடுபண்ணி, காப்பியும் ஒருவழியாய் உருமாறிப்போனது. இது என் மனைவி கிச்சனில் சந்தித்த போராட்டம். அது எனக்குத் தெரியவில்லை.

### வீட்டுக்கு வீடு வாசற்படி

சில வேளைகளில் ஊழியர்களாகிய உங்களுக்கும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கலாம். உங்களுக்கு மட்டும் சாப்பாடு வைத்திருப்பார்கள், நீங்கள் 4 விசுவாசிகளைக் கூட்டிக்கொண்டு வந்து அவர்களுக்கும் சாப்பாடு கொடு என்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? உங்களைப் பொருத்தமட்டில் நீங்கள் பெரிய தாராள பிரபுவாக இருக்கலாம். வந்தவர்களுக்கெல்லாம் பொங்கிப்போட வேண்டிய நிலையில் இருப்பதோ மனைவி. அவர்களுக்கு 5 அப்பத்தை 5000 பேருக்கு பங்கிடுவதற்குரிய கிருபைகள் இல்லை. அல்லது அந்தக் கிருபை உங்களுக்காவது இருந்திருக்கவேண்டும். அதுவும் இல்லை. அவர்களுக்கோ **அடுப்படியில் போராட்டம்.** உங்களுக்கோ **நடு ஹாலில் போராட்டம்.** வந்தவர்களுக்கோ **வயிற்றுக்குள்ளே போராட்டம்.** எல்லாரும் சேர்ந்து **போராட்டம் போராட்டமே, போராட்ட ஜீவியமே** என்று பாடினால்கூட நன்றாக இருக்கும். இந்தப் போராட்டங்களைப் பற்றி அறிந்துவைத்திருப்பதினால்தான் இன்றைக்கு ஊழியக்காரர்களைத் திருமணம் முடிப்பதற்கு அநேகப் பெண்கள் முன்வருவதில்லை. ஊழியக்காரனைக் கட்டினால் சமைத்துப்போட்டே நம் காலங்கள் வெறுமையாய் ஓடி மறைந்துவிடும். பின்னே எங்கே ஊழியம் செய்வது என்று அலறுகிறார்கள்.

நான் என் சிந்தையில் என் மனைவிமீது சற்றுக் கோபத்துடனேயே படுத்துவிட்டேன். இரவு 9 மணிக்குப் பால்காரன் வந்திருக்கிறான் உடனே என் மனைவி அவசர அவசரமாக பாலைக் காய்ச்சிவிட்டு நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த என்னை வந்து எழுப்பினார்கள். ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தேன், என் மனைவி கரத்தில் ஒரு கப் பால் இருந்தது. அவர்கள் என்னிடம் மிகவும் அன்பாகச் சொன்ன காரியம் என்னவென்றால்; **மதியம் நீங்க சாப்பிடவில்லை, இன்றைக்கு குழம்பும் வைக்கவில்லை, வெறும் ரசமும் துவையலும்தான் வைத்திருந்தேன், பால்காரனும் வரவில்லை, இப்போதுதான் வந்தான். எனவே இந்தப் பாலை மட்டும் குடித்துவிட்டுப் படுத்துக்கொள்ளுங்கள்** என்றார்கள். அவர்களது அன்பைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் நான் இல்லை. ஊழியக்காரர்களாகிய நம் மண்டையில் சில வேளையில் இப்படி ஏதாவது ஒரு கசப்பு ஏறியிருக்கும். நமக்கு இருக்கும் கோபத்தோடே தூங்கவும் சென்றுவிடுவோம். என் நிலை அதுதான். வசனம் சரியாகத்தான் சொல்லுகிறது, **நான் நித்திரைபண்ணினேன் என் இதயமோ விழித்திருந்தது (உன்.4:2).** நாம் நன்றாகக் கண்களை மூடிக்கொண்டு நித்திரை செய்தாலும் இதயம் தூங்காது, மனம் தூங்காது, இருதயத்தில் ஒரு கோபம் குடி கொண்டுவிட்டதென்றால் அது மனதை நிரப்பிவிடும். அது விரும்பிய காரியத்தைச் செய்து முடிக்குமுன் தூங்காது.

நான் கண்களைத் திறந்தேன். மனுஷன் காலையில் சென்று மாலை 4 மணிவரை அலைந்துவிட்டுச் சாப்பிடாமல் வந்து சேர்ந்தேன், ஒரு கப் காபி கொடுக்க முடியவில்லை, இந்தப் பாலை நீயே குடித்துவிட்டுப் போய்ப் படு என்று சொல்லிவிட்டு திரும்பவும் படுத்துக்கொண்டேன். வேறு எதையும் பேச வில்லை.

சரியாக **நள்ளிரவு 12 மணி அளவில்** என்னுடைய கரத்தை ஒரு சிறு குழந்தையின் கரம் வந்து தடவிக்கொடுத்தது போலிருந்தது. அந்நாட்களில் சின்னக் குழந்தை எங்கள் வீட்டில் இல்லை. திடீரென விழித்துப்பார்த்தேன். அந்த அறையில் ஒரு சத்தம்; **"மகனே, தாமஸ் சமாதானமாத் தூங்கறீயாப்பா?"** அதிர்ச்சியடைந்த நான் என் படுக்கையை விட்டு எழுந்தேன். அதுவரை நான் தூங்கினேன், ஆனால் சமாதானமாய்த் தூங்கவில்லை. என் கண்களை மூடித் தூங்கினாலும், எனக்கும் தெரியாமல் என் இதயம் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததை நான் உணரவில்லை. எரிச்சலோடு தூங்கியிருக்கிறேன். சமாதானமில்லாமல் கோபத்தோடு ஒரு மனிதனால் தூங்க முடியும் என்பதை அன்றைக்கு அனுபவப்பூர்வமாய் அறிந்து கொண்டேன். உடனே என் மனைவியைப் போய் எழுப்பி, தவறாகப் புரிந்துகொண்டு பேசிவிட்டேன், என்னை மன்னித்துக்கொள் என்றேன். அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். இருவரும் அழுதோம். அந்த நள்ளிரவில் ஒருவருக்கொருவர் மன்னிப்புக் கேட்டுச் சமாதானமாகிப் பின்னர் தூங்கச் சென்றேன்.



அதற்குப்பின் தூங்கினேன், எப்படி என்றால் சமாதானமாக! கசப்பு வந்தவுடனே முதலாவது நம்மைச் சந்திப்பவர் கர்த்தர் என்பதை மறந்துவிடவேண்டாம். தேவன் உங்களைச் சந்திக்கும்போது உடனே கீழ்ப்படியுங்கள்.

### ஊழியர்களுக்கும் உபத்திரவம் உண்டு!

ஊழியக்காரர்களாகிய நாமெல்லாம் பெரிய செயின்ட்ஸ் (பரிசுத்தவான்கள்) அல்ல. குடும்பம் ஏதுமில்லா எலியாவுக்கு எத்தனைப் பாடுகள்? குடும்பமாய் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளபோது கணவன் மனைவிக்கு நடுவே பிரச்சனைகள் வரலாம். கோபங்கொள்ளக்கூடிய சூழ்நிலை வரலாம். ஆனால், இதைச் சந்தர்ப்பமாக வைத்துக் கொண்டு மூன்று நாட்கள் பேசாமல் மௌன விரதமிருக்கிற பரிசுத்தவான்களெல்லாம் இருக்கிறார்கள். பின்னர் நாலாவது நாள் லாசரு உயிர்த்தெழுந்ததுபோல உறவுகள் உயிர்த் தெழும்பும். இது அல்ல வாழ்க்கை. என்னைப் பொருத்தவரையில் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னால் உங்கள் கோபம் தணியவேண்டும். அதுக்கு மேல் போனால் நீ பிசாசுக்கு இடம் கொடுத்துவிட்டுப் படுத்திருக்கிறாய் என்றுதான் வேதம் சொல்லுகிறது. பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னதாக உங்கள் கோபம் தணியக்கடவது (எபே.4:26,27).

தேவ ஊழியரே உங்கள் மனைவிமேல் எரிச்சலோடு நீங்கள் படுத்திருந்தால் விடியற் காலையில் தேவ சமூகத்தை உங்களால் உணரமுடியாது. அந்த நாளின் ஊழியம் உதவாது. எனவேதான் உங்கள் சிந்தனையும் செயலும் முக்கியமானது என்று கர்த்தர் அதிலே கிரியை செய்கிறார்.

### உருவாக்கும் பணியில் உற்ற துணையின் பங்கு

பாஸ்டர் வேலை ரொம்ப லேசானது என்று நினைத்து விடாதீர்கள். அநேகர் அதை அற்பமாக எண்ணுகிறார்கள். கர்த்தரோடு நாம் விளையாடக்கூடாது. தன் சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாதவன் சபையை எப்படி நடத்துவான்? இந்த உலகத்திலே கர்த்தர் ஊழியர்களாகிய நம்மை உருவாக்குவதற்கு வைத்திருக்கிற ஒரு முக்கியமான ஆள் யார் என்றால் உங்கள் வாழ்க்கைத் துணைதான் என்பதை மறந்துபோகாதீர்கள். விசுவாசிகள் நம்மை உருவாக்குகிறார்களோ இல்லையோ, நம்ம அம்மாமார் நம்மை உருவாக்கி விடுவார்கள். இது என்னுடைய தனிப்பட்ட அனுபவம்.

என்னுடைய முதல் பிரசங்கத்தையெல்லாம் நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்று பேசிய காலங்கள் உண்டு. செய்தி கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போய்ச் சாப்பிட உட்காரும்போது. சாப்பாடு பரிமாறிக் கொண்டே என் மனைவி அன்றையச் செய்தியில் இருந்து சில காரியங்களை என்னோடு பகிர்ந்து கொள்வார்கள். இன்றைக்கு உங்கள் பிரசங்கம் ரொம்ப நன்றாய் இருந்தது. நன்றாய்ப் பேசினீர்கள். ஆனால், இந்த வார்த்தையைக் கொஞ்சம் இப்படிச் சொல்லியிருந்தால் இன்னும் நன்றாய் இருந் திருக்கும் என்பார்கள். இந்த வார்த்தையைக் கொஞ்சம் கடினமாகச் சொன்னதை மாற்றி இப்படிச் சொல்லியிருந்தால் மிகவும் நன்றாய் இருந் திருக்கும் என்று அவர்கள் என்னோடு பேசும்போது நான் அதைக் குறித்து யோசித்து எனது அடுத்த செய்தியில் தவறுகளைத் திருத்திக்கொள்வேன். நம்மைச் சரியான பாதையில் கொண்டு வந்து சேர்க்க, ஆவியானவரின் சத்தத்தை வெளிப்படுத்த ஒரு ஊழியக் காரனுக்கு அவனது மனைவியையே கர்த்தர் பயன்படுத்துகிறார். ஒரு விசுவாசியை தேவன் அவ்வாறு உட்கார வைக்கவில்லை. எந்த விசுவாசி நீங்கள் செய்வதை யெல்லாம் சரி சரி என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருப்பான்? அவனுக்குப் பிடிக்கவில்லையென்றால் இன்னொரு வீட்டிற்குப் போய்விடுவான். மனைவியானவள் அப்படிப் போகமுடியுமா? வாழ்நாளெல்லாம் உங்களோடு இருப்பதற்காக வந்தவள். சில விஷயங்களில் நம்மை உடைப்ப தற்கும் உருவாக்குவதற்கும் கர்த்தர் அவர்களை நம் அருகிலேயே வைத்திருக்கிறார். அநேக ஊழியர்கள் மனைவியின் பேச்சைக் கேட்கிறதில்லை, தங்களைச் சரிப்படுத்திக் கொள்கிறதில்லை, கசப்புக்களை இதயத்தில் சேமித்து வைத்துக்கொண்டு இறுதியில் விழுந்துபோகிறார்கள்.

இன்றைக்கு நான் ஒரு ஊழியக்காரனாய் நிற்கிறதிலே என் மனைவிக்கு ஒரு பெரும் பங்கு இருக்கிறது. கர்த்தர் என்னை உருவாக்குவதற்குப் பயன்படுத்திய பாத்திரங்களிலே ஒரு பெரிய பாத்திரமாக இருப்பவர் என் மனைவி. கர்த்தர் அவர்களுக்கு அந்தக் கிருபையைக் கொடுத்தார். நம்மை விசேஷித்தவர்களாக்கி, நம் சிரசைச் சிங்காரிக்க விரும்பும் தேவன் நம் வாழ்க்கையில் இப்படிப்பட்ட பாதைகளில் நடத்தி, நம் தலையை உயர்த்துகிறவராய் இருக்கிறார். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

சிரசுக்கு வந்த
சிங்காரம் தொடரும்..
தொகுப்பு : ஆசிரியர்

சங்கீதம் 21

# சங்கீத நூல் தியானம்

சகோ. D.J.J.பெத்தேல்ராஜ்



இது தாவீதரசன் பாடிய ஓர் சிறிய, இனிய பாடல். தனது வாழ்க்கையில் ஆண்டவருடைய ஆற்றல் மிகுந்த பராமரிப்பையும், பாதுகாவலையும் அனுபவித்தவர் அவர். அந்த அனுபவத்தை உணர்ந்து இப்பாடலைப் பாடியிருக்கிறார்.

நம்முடைய ஆற்றல் அல்ல, ஆண்டவருடைய ஆற்றலே நம்மைப் பாதுகாக்கிறது. மனிதர்கள் நமக்கு அளிக்கும் பாதுகாப்பு அல்ல, ஆண்டவருடைய பாதுகாப்பே நாம் அழிவுறாமல் நம்மைக் காக்கிறது.

மாவீரர்களான அலெக்சாண்டர், நெப்போலியன் ஆகியோருக்கு இல்லாத ஆற்றலா, இல்லாத மனோ தைரியமா? உலகின் தலைசிறந்த செல்வந்தர்களிடம் இல்லாத பண பலமா? இவை யாவும் அழிவிலிருந்து அவர்களைக் காக்கவில்லையே!

இலங்கையின் பிரதமராக இருந்தவர் திரு.பண்டார நாயகே (திருமதி.சந்திரிகாவின் தகப்பனார்) கடுமையான பாதுகாப்பு வளையங்களுக்குள்ளிருந்த அவர், புத்த பிட்சு வேடமணிந்த ஒருவரால் கொல்லப்பட்டார் என்பது உலகறிந்த வரலாறு. நமது பாரதப் பிரதமராக இருந்த திருமதி. இந்திரா காந்தி அவர்களை அவருடைய மெய்க்காப்பாளரே சுட்டுக் கொன்றார். மனிதர்களின் பாதுகாவல் அல்ல, ஆண்டவரின் பாதுகாவலே நமக்குத் தேவை. அது மனிதரிடமிருந்து மட்டுமல்ல, பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் நம்மைப் பாதுகாக்கும். அதுதான் ரட்சிப்பு.

நமது விருப்பங்களும் வேண்டுதல்களும் ஆண்டவரின் பார்வையில் பிரியமானவையாய் இருந்தால் அவை எல்லாம் நமக்கு வாய்க்கும். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கையினால் வாய்க்கும். தாவீதரசனுடைய விருப்பங்கள் அனைத்தும் ஆண்டவருக்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தன, எனவே அவருக்கு எல்லாம் வாய்த்தன. அவருடைய வேண்டுதல்கள் அனைத்தும் பலித்தன.

இயல்பாகவே மனிதர்கள் செல்வத்தை நாடி ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். தான் சேர்த்து வைக்கும் செல்வம் தன் காலத்திற்குப் பின்பு என்னவாகும் என்ற சிந்தனை மனிதனுக்கு இருப்பதில்லை (பிரசங்கி 4:8, 5:13-20, 2:18-21) ஆனால் வேதம் சொல்கிறது : முதலாவது ஆண்டவருடைய ராஜ்யத்தையும் **அவருடைய நீதியையும்** தேடுங்கள்.(செல்வத்தை அல்ல)! அவ்வாறு தேடினால், ஆண்டவரின் ஆசீர்வாதமே செல்வத்தைக் கொண்டுவந்து தரும். நீங்கள் தேடிச் செல்ல வேண்டியதில்லை. ஆண்டவர் தருகிற ஆசீர்வாதத்தில் வேதனைகள் இருக்காது. (மத் 6:33, நீதி. 10:22).

ஆண்டவர் நம்மை உயர்த்துகிறார். முடிசூட்டுகிறார். இந்த இடத்தில் ஒரு சேலா! எங்கு கிடந்த உங்களை, எப்படி இருந்த உங்களை, இப்போது ஆண்டவர் எவ்வாறு உயர்த்தி யிருக்கிறார் என்று சிந்தித்துப் பார்த்து அவரைத் துதியுங்கள்.

ஆண்டவரின் ஆசீர்வாதம் நாம் நினைக்கும் அளவில் மட்டுமல்ல, நாம் நினைப்பதை விட, நாம் கேட்பதைவிடப் பலமடங்கு அதிகமாகவே இருக்கும். எசேக்கியா அரசன் மரணத்தின் விளிம்பிலிருந்தபோது ஆண்டவரை நோக்கி வேண்டினார். அவருடைய வாழ்க்கையில் 15 ஆண்டுகள் போனஸாகக் கிடைத்தது (2 ராஜா 20:1-6). ஆண்டவரிடம் கேளுங்கள். பெற்றுக் கொள்வீர்கள்.

புகழை விரும்பாத மனிதர் உண்டா? நாலுபேர் நம்மைக் குறித்து நல்வார்த்தைகளைச் சொல்வது நமக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது அல்லவா? ஆனால் நினைவில் கொள்ளுங்கள். நம்மைக் குறித்து நாலு நல்ல வார்த்தைகளைச் சொல்பவர்கள், நமது முதுகுக்குப் பின்னால் நானூறு தீய சொற்களைச் சொல்லக்கூடும். மனிதரின் புகழ்ச்சி நமக்கு வேண்டாம். ஆண்டவரின் ரட்சிப்பே, பராமரிப்பே நமக்குப் புகழ் சேர்க்கட்டும். ஆண்டவரின் சமுகம் நம்மோடு இருப்பதால் நமக்கு ஆனந்தம் உண்டாகட்டும். அவருடைய சமுகம் நம்மோடு இருந்தால், அவர் தரும் ஆசீர்வாதங்களும், புகழும் நிரந்தரமாக இருக்கும்.



ஆண்டவரை மட்டும் சார்ந்திருந்தால், ஆண்டவரை மட்டுமே நம் நம்பிக்கையாகக் கொண்டிருந்தால், என்றும் நாம் அசைவுறாமல் இருக்க முடியும். மனிதர்கள் நம்மைக் கைவிடுவார்கள். ஆண்டவர் ஒருபோதும் நம்மைவிட்டு விலக மாட்டார், நம்மைக் கைவிடமாட்டார். அல்லேலூயா!

நம் ஆண்டவரின் கரம் எதிரிகளை மடக்கிப் பிடிக்கும்; அவர்களை அழிக்கும். ஆண்டவருடைய கரத்திற்கு மறைவாக அவர்கள் எங்கும் சென்று பதுங்க முடியாது. சங். 139, ஆமோஸ் 9, ஒபதியா - ஆகிய அதிகாரங்களைத் தியானியுங்கள். நாம் ஆண்டவரின் பிள்ளைகள் அல்லவா? நமக்கு எதிரிகள் என்றால் அவர்கள் ஆண்டவரின் எதிரிகள்தானே?

அவர்கள் ஆண்டவரின் கரத்தில் சிக்கும் நாளில் பொசுங்கிப் போவார்கள்; இருந்த இடம் தெரியாமல் அழிந்து போவார்கள். ஆண்டவரின் அம்புகள் அவர்களைச் சல்லடையாய்த் துளைத்துத் துவம்சம் செய்யும். அல்லேலூயா

ஆண்டவர் எழுந்திருக்கிறார்- உங்களுக்காக யுத்தம் செய்வதற்காக! பாடித் துதியுங்கள்! ஆர்ப்பரியுங்கள்! அவர் உங்களுக்கு அளிக்கப் போகும் விடுதலையைக் காணப் போகிறீர்கள்! அல்லேலூயா!

## ஆகஸ்ட் மாத வேத வினாப் போட்டியின் விடைகள்

1. நெகேமியாவின் மறுபெயர் திர்ஷாதா. வச 8:9

பௌவர் தமிழ் மொழிபெயர்ப்பின்படி, "திர்ஷாதா என்னப்பட்ட நெகேமியா" என்று இவ்வசனம் கூறுவதால் திர்ஷாதா என்பது நெகேமியாவின் மறு பெயர் எனக் கொள்ளலாம்.

ஆனால் ஸ்மித் போன்ற வேத அறிஞர்கள் திர்ஷாதா என்றால் அதிகாரம் படைத்த ஆளுநர் (Governor) என்று பொருள் என்கிறார்கள். பெர்சிய அரசில், யூதேயா பகுதியின் ஆட்சிப் பொறுப்பாளராக (திர்ஷாதாவாக) நெகேமியா செயல்பட்டார் என்பது வேத அறிஞர்கள் பலரின் கருத்தாகும்.

2. தெக்கோவா ஊர் மக்கள் அலங்கத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டபோது, அந்த ஊரின் பிரபுக்கள் அந்தத் திருப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. வச. 3:5

3. அலங்கத்தைக் கட்டிய திருப்பணி (வச.3:12) பாடல் பாடும் திருப்பணி ஆகியவற்றில் பெண்களின் (வச.7:67) பங்கு இருந்தது. தீர்க்கதரிசனப் பணியிலும் பெண்கள் இருந்தார்கள் (வச.6:14) ஏதாவது இரண்டு பணிகள் எழுதியிருந்தால் சரி.

4. கூடாரப் பண்டிகை ஏழாம் மாதத்தில் கொண்டாடப்பட்டது (வச. 8:14). எபிரேயர்களின் காலண்டரில் ஏழாவதாக வருவது திஸ்ரி எனும் மாதமாகும்.

5. ஒரு ஜாம நேரம் பாவ அறிக்கை செய்தார்கள். வச. 9:3.

ஒரு ஜாமம் என்பது மூன்று மணி நேரம் ஆகும்.

6. இஸ்ரவேல் மக்களுக்கு ஆண்டவர் மகிழ்ச்சியை உண்டாக்கியபடியால் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் களிகூர்ந்தார்கள். எருசலேம் நகரத்தின் "களிப்பு" வெகுதூரம் வரை கேட்கப்பட்டது. வச. 12:43.

7. அரண்மனைத் தலைவனான அனனியா அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனாயிருந்தார். வச. 7:2.

8. ஆசாரியனான செலேமியா, வேதபாரகனான சாதோக், லேவியனான பெதாயா மற்றும் அவர்களுக்குத் துணையாளனான ஆனான் ஆகியோர் உண்மையுள்ளவர்கள் என்று (அனைவராலும்) எண்ணப்பட்டார்கள். வச. 13:13

உங்களைக் குறித்த சாட்சி எப்படிப்பட்டது?

9. தேவாலயப் பணிவிடைக்காரரான லேவியரும், பாடகரும் தங்கள் வெளிநிலங்களுக்கு ஓடிப்போனார்கள். அவர்களுக்கு நியமிக்கப் பட்டிருந்த பங்குகள் கொடுக்கப்படாததால் அவர்கள் ஓடிப்போனார்கள். வச. 13:10

10. ஏழாம் வருடம் விடுதலை வருடம் ஆகும். வச. 10:31.

11. செங்கடலின் ஊடாகக் கடந்து சென்ற இஸ்ரவேல் மக்களைப் பிடிப்பதற்காகப் பின் தொடர்ந்து வந்த எகிப்தியர்கள் தண்ணீரிலே கல்லைப் போடுகிறது

போல அமிழ்த்தப்பட்டுப் போனார்கள். வச. 9:11 (யாத். 15:5-ஐயும் பாருங்கள்)

12. அலங்கத்திலே கட்டுமான வேலை செய்தவர்கள், சுமை சுமந்தவர்கள், சுமை ஏற்றுகிறவர்கள் ஆகிய அனைவரும் ஒரு கையினால் வேலை செய்தார்கள். மறுகையில் ஆயுதத்தை வைத்திருந்தார்கள். வச. 4:17

13. தங்கள் இனத்தாரிடமே வட்டி வசூலித்த யூதப் பிரபுக்களையும், அதிகாரிகளையும் கண்டிக்கும்போது நெகேமியா, "நாம் தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டாமா"என்று கேட்டார். வச. 5:7-9.

14. மத்தனியா என்பவர் ஜெபத்திலே ஸ்தோத்திரப் பாட்டைத் துவக்குகிற தலைவனாயிருந்தார். வச. 11:17,

15. நிரப்புக :

ஓரோனியன் : ____________ யா என்பது தவறாக அச்சிடப்பட்டுவிட்டது. எனவே இது கைவிடப்படுகிறது.

கிபியோனியன் : மெலதீ யா. வச. 3:7

16. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| அ. ராஜாவின் வனம் | - | 4. மரங்கள் | -2:8 |
| ஆ. தங்கக் காசு | - | 5. திர்ஷாதா | -7:70 |
| இ. தட்டார் | - | 1. மளிகைக்காரர் | -3:32 |
| ஈ. சங்கீதங்கள் | - | 3. ஆசாப் | -12:46 |
| உ. அராயா | - | 2. ஊசியேல் | -3:8 |

**எஸ்றா, நெகேமியா நூல்கள் - நூல் குறிப்பு**

எஸ்றா, நெகேமியா நூல்கள் இரண்டும் மூல மொழியில் ஒரே நூலாகவே இருந்தன. செருபாபேல் எருசலேமுக்கு வந்து தேவாலயத்தைக் கட்டி முடித்ததும், பின்பு எஸ்றா எனும் வேதபாரகன் எருசலேமுக்கு வந்து இஸ்ரவேல் மக்களை நல்வழிப்படுத்தியதும் எஸ்றா நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நெகேமியா நூலில், நெகேமியா எருசலேமுக்கு வந்து எருசலேமின் அலங்கத்தைக் கட்டிய நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ்றா நூலின் காலம் கி.மு. 536 முதல் 456 வரையிலானது

நெகேமியா நூலின் காலம் கி.மு. 445 முதல் 433 வரையிலானது.

ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகளின் நூல்களும் இக்காலத்தைச் சேர்ந்தவையே

2 நாளாகமம் நூலின் தொடர்ச்சி தானியேல் தீர்க்கதரிசியின் நூலாகும். தானியேல் தீர்க்கதரிசன நூலின் தொடர்ச்சியே எஸ்றா, நெகேமியா நூல்கள்.

தேவ ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவினால்...

உங்கள் அன்பின் காணிக்கைகளை, வருட நன்கொடைகளை மணியார்டர், காசோலை, அல்லது டிமான்ட் டிராப்ட் மூலம் அனுப்பலாம். அவ்விதம் அனுப்பும்போது உங்களது தெளிவான விலாசத்தை எழுதி உங்களது பதிவு எண்ணையும் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

M.O.அனுப்ப வேண்டிய முகவரி
Pastor. J. Israel Vidya Prakash
"Jeeva Thanneer
2/888, M.M.S. Colony, Reserve Line (P.O),
Madurai - 625 014.

வங்கி வழியாக....
NAME: J. ISRAEL VIDYA PRAKASH
A/C NUMBER : 109 688 18035
CODE: 00253 STATE BANK OF INDIA, TALLAKULAM



**செப்டம்பர் மாத வேத வினாப் போட்டி**
**(விடைகள் எஸ்தர் புத்தகத்திலிருந்து)**

1.வஸ்தி அரசிப் பதவியிலிருந்து அகற்றப்பட்டபின்பு ஏறத்தாழ எத்தனை காலத்திற்குப் பின்பு எஸ்தர் அரசியாக முடிசூட்டப்பட்டார்?

2. மொர்தெகாய்க்கும் எஸ்தருக்கும் என்ன உறவு?

3. மொர்தெகாய் யூத குலத்தவரா? வேறு குலத்தவரா?

4.வேகமான ஒட்டகங்கள் மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறி, தீவிரத்தோடே புறப்பட்டுப் போனவர்கள் எதற்காகப் போனார்கள்?

5.அற்போனா செய்த இரண்டு செயல்கள் யாவை?

6.இந்து தேசம் என்ற பதம் எங்கெங்கு வருகிறது?

7.தூக்கில் போடப்பட்டதால் செத்தவன் யார்? செத்தபின்பு தூக்கில் போடப்பட்டது யார்?

8.விகற்பமாயிருந்ததாக எண்ணப்பட்டது எது?

9.ஆமானின் உத்தரவை மாற்றி வேறு ஆணை பிறப்பிக்கப்பட்டது எப்போது?

10.பூரீம் என்ற பெயர் எப்படி வந்தது?

11. தாத்தாவின் பெயரின் பின் பாதியைத் தன் பெயரில் கொண்டிருந்த -------------தாத்தா யார்?

12. சரியா தவறா:

அகாஸ்வேரு அரசன் நூற்றெண்பது நாளளவும் அனைவருக்கும் விருந்தளித்தான்.

(மறக்காமல் வசனத்தைக் குறிப்பிடுங்கள்)

**வாசகர்களிடமிருந்து...**

**It's wonderful!**

*Dear Pastor Israel*

*All messages are very use full, especially Pr. Thomasraj's message and Pr. Victor Jeyapal's article are wonderful. I wish God will provide me a great harvest in my life as your message ie 'Uzhuthundu Vazhvor'.*

*Thanks & regards*

**Bro. Samuel, Kuwait**

**இது ஆவியானவரின் சத்தம்!**

ஜீவதண்ணீர் பத்திரிகை மூலமாக அநேக ஆவிக்குரிய செய்திகளை பரிசுத்த ஆவியானவர் இந்நாட்களில் எங்களுக்குத் தந்துவருகிறார். குறிப்பாக பாஸ்டர் தாமஸ்ராஜ் அவர்களின் செய்திகள் மூலமாக அநேக மறைபொருள்களை, ஆவியானவர் வெளிப்படுத்திவருகிறார். சென்னைக்குச் செல்லும்போதெல்லாம் அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் பங்குபெறுவது வழக்கம். மதுரையில் இருந்தாலும் பத்திரிகை மூலமாக கர்த்தர் தேவ தாசர்களின் செய்திகளை எனக்குக் கிடைக்கச்செய்கிறார். சங்கீதப்பகுதியில் சகோ. பெத்தேல்ராஜ் அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கிவருகிறார்கள். ஒட்டுமொத்தமாக நாங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதற்கு எல்லாவிதங்களிலும் எங்களை உற்சாகப்படுத்துகிற இந்தப் பத்திரிகை ஊழியத்திற்காக தேவனைத் துதிக்கிறேன். உங்களுக்கு நன்றிகூறுகிறேன்.

**திருமதி. விஜயா மைக்கேல், மதுரை-17**

**தாயைப் போலத் தேற்றுகிறார்!**

என்னுடைய பெற்றோரின் காலங்கள் சீக்கிரமாகவே முடிந்துவிட்டன. தாயைப் போலத் தேற்றவும், தந்தையைப் போல சுமந்து செல்லவும் கர்த்தர் தமது வார்த்தையைக் கொடுத்திருக்கிறார். வேதத்தை வாசித்து ஜெபிக்கிறோம். அதோடுகூட என் அம்மா உயிரோடு இருந்தால் எப்படி எங்களை ஆவிக்குரிய விதங்களில் தைரியப்படுத்துவார்களோ அதேபோல திருமதி பெல்ஸி வசந்தா அம்மா அவர்களது எழுத்துக்கள் என்னையும் குடும்பத்தையும் தைரியப்படுத்துகிறது. தினமும் வேதத்தோடுகூட நீரே என் பெலன் புத்தகத்தின் ஒரு செய்தியை முழுவதுமாக குடும்ப ஜெபத்தில் வாசித்து அந்த ஆலோசனைகளினால் பெலனடைந்துவருகிறோம். இது ஒரு தாய் தந்த பரிசு! ஆகஸ்ட் 15-ம் தேதி மாலை இன்னிசையில் நற்செய்தி கூட்டத்தின் முடிவில் என்னைச் சந்தித்துக் கொடுத்த இந்தப் புத்தகத்திற்காக நன்றிகூறுகிறேன்

**சகோ. பீட்டர், மதுரை -20**

## என் அருமை ஆசிரியப் பெருமக்களுக்கு

செப்டம்பர் 5 –ம் நாள் ஆசிரியர் தினம் என்பதை அறிவேன். இம்மாதத்தில் உங்களை வாழ்த்தி உற்சாகப்படுத்த என் மனம் விரும்பியது.

நீங்கள் யாரென்றால்....

மனக்காயங்களுக்கு மருந்திடும் **தாதியாக..**

ஊக்கம் கொண்டவர்களை உற்சாகப்படுத்தும் **தளபதியாக..**

தவறு செயகிறவர்களைக் கண்டித்துத் திருத்துகிற **நீதிபதியாக..**

முளைவிடுகிற பருவத்திலேயே முற்போக்கான சிந்தனைகளை விதைத்து விளையச்செய்கிற **விவசாயியாக...**

ஆற்றல் கொண்ட இளம் நெஞ்சங்களை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்கிற **அறிவரசர்களாக...** செயல்படும் உங்களை வாழ்த்துகிறேன்.

ஒரே நேரத்தில் இப்படியெல்லாம் செயல்படக்கூடிய பாக்கியம் ஆசிரியர்களுக்கு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. வேறு எந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கும் எத்தனை முயன்றாலும் இத்தனை பெருமை கிடைக்காது.

கற்றுக்கொடுக்கும் நீங்கள் ஏராளமாய் நன்மைகளை பெற்றுக்கொள்ளவாழ்த்துகிறேன். வாழ்த்துவதற்குக் காரணம், நானும் ஒரு ஆசிரியர் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

வாழ்க ஆசிரியர் சமுதாயம், வளர்க மாணவர் சமுதாயம், செழிக்கட்டும் இந்திய தேசம்.

உங்கள் சகோதரன் : ஜே.இஸ்ரேல் வித்ய பிரகாஷ்
ஆசிரியர்– ஜீவதண்ணீர்

## 2012 ஆகஸ்ட் மாத வேத வினாப் போட்டியில் சரியான விடைகளை எழுதியவர்கள்

1. திருமதி. ஜாஸ்மின் ஞானதாஸ், சென்னை
2. **திருமதி. ஜேன் தர்மராஜ், திருநெல்வேலி ✧**
3. **திருமதி. ரூபி ஜெயராஜ், மதுரை ✧**
4. **திருமதி. கெட்சி ஆர்தர், புதுச்சேரி ✧**
5. W.சோபனா, மதுரை
6. ஜெமி நல்லையா, மதுரை
7. தெல்மா ஸ்டேன்லி, மதுரை
8. திருமதி. கௌசி ரமணன், துபாய்
9. திருமதி. மேரிராஜ், மதுரை
10. திரு. சாலமோன், மதுரை

✧ பரிசுக்குரியவர்கள்



## ஆகஸ்ட் 15–ம் தேதி மாலை நடைபெற்ற இன்னிசையில் நற்செய்தி கூட்டப்படங்கள்





